சென்னை புத்தகக் காட்சி
CHENNAI BOOK FAIR
BAPASI
தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம்
THE BOOKSELLERS' & PUBLISHERS' ASSOCIATION OF SOUTH INDIA
8, Second Floor, Sun Plaza, G.N. Chetty Road, Chennai-600 006. Ph.:044-2815 5238, 4865 5238
Mail:bapasimail@gmail.com, Web:www.bapasi.in /bapasi /Bapasiofficial

# அரங்க அமைப்பாளர்களுக்கான விதிமுறைகள்

**(விதிமுறைப் படிவத்தில் நிறுவனத்தின் முத்திரையுடன் கையொப்பமிட்டு விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தால் மட்டுமே விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும்.)**

1. அரசால் தடை செய்யப்பட்ட புத்தகங்கள், சி.டி மற்றும் உரிய அனுமதி பெறாமல் அச்சிடப்பட்ட நூல்கள், உரிய அனுமதி பெறாமல் தயாரிக்கப்பட்ட சி.டிகள் ஆகியவற்றை விற்பனை செய்வதும், காட்சிக்கு வைப்பதும் உரிமை மீறிய செயலாகும்.

2. ஒரு நிறுவனத்தின் பெயரில் ஒதுக்கப்பட்ட அரங்கை வேறு ஒரு நிறுவனத்திற்கு உள்வாடகைக்கு விடுவதும், தமிழ் - ஆங்கிலம் என அரங்குகளை மாற்றி அமைப்பதும் குற்றமாகப் பதிவு செய்யப்பட்டு அந்த உறுப்பினர் தகுதியை இழக்கும் வகையில் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். நடப்புக் காட்சியிலும் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டாது.

3. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒதுக்கப்பட்ட அரங்கத்தின் இடத்தைத் தவிர மற்ற இடங்களை ஆக்கிரமித்துப் புத்தகங்களை அடுக்கி வைப்பதோ, விற்பனை செய்வதோ, விளம்பரம் செய்வதோ அனுமதிக்கப்படமாட்டாது. அரங்கத்திற்கு வெளியே அதிகபட்சமாக **3'x2' அளவுள்ள கேஷ்டேபிள்** ஒன்று மட்டுமே அனுமதிக்கப்படும். அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாக மேசை நாற்காலிகளை உபயோகிப்பது உரிமை மீறிய செயலாகும்.

4. அரங்கில் விற்பனை செய்யப்படும் நூல்களுக்கு (விலைபாகுபாடு இல்லாமல்) கண்டிப்பாக 10% விழுக்காடு கழிவு கொடுக்கப்பட வேண்டும். 10% சதவிகிதத்திற்கு மேல் கழிவு கொடுப்பது பபாசியால் அனுமதிக்கப்படாத செயலாகும். புத்தக விலையைக் குறிப்பிட்டு (உதாரணமாக 100 ரூபாய் புத்தகம் 75 ரூபாய்க்கு அல்லது 50 ரூபாய்க்கு கிடைக்கும் என அறிவிப்புகள் செய்வது) அதைக் குறைந்த விலையில் விற்பனை செய்வதாக அறிவித்து விற்பனை செய்யக் கூடாது. விற்பனையாளர்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் உரிய கழிவு கொடுப்பது அனுமதிக்கப்படுகிறது.

5. புத்தக விற்பனைக்காக ஒதுக்கப்பட்ட அரங்குகளில் புத்தகங்களைத் தவிர சி.டிக்கள் விற்பனை செய்வதோ, ஒலி பெருக்கி, தொலைக்காட்சிப் பெட்டி போன்ற சாதனங்களை உபயோகப்படுத்துவதோ உரிமை மீறிய செயலாகும்.

6. 3D படங்கள், வெளியீட்டாளர் பெயர் இல்லாத புத்தகங்கள் விற்கத் தடை செய்யப்பட்டுள்ளது.

7. சி.டி மற்றும் டி.வி.டி. போன்ற கல்வி சார்ந்த மென்பொருள்களை விற்பனை செய்யும் மல்டிமீடியா அரங்குகள் சி.டி.களை சோதனை செய்து பார்க்கும் பொருட்டு கணினிகளை உபயோகப்படுத்தும் பொழுது ஸ்பீக்கர்களை உபயோகப்படுத்துவது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஹெட்போன்கள் மட்டுமே உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு நிறுவனமும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அரங்கத்தில் தாங்கள் விண்ணப்பித்த நிறுவனத்தின் பெயருடன் கூடிய விற்பனைப் பட்டியலை மட்டுமே வாசகர்களுக்கு வழங்க வேண்டும். அந்த அரங்கத்தில் இடம் பெற்றுள்ள நிறுவனத்தின் பெயர் அச்சிடப்படாத பட்டியல் மூலம் விற்பனை செய்யப்படும் புத்தகங்களோ, C.D. & D.V.D. போன்ற பொருள்களோ திருட்டுப் பொருள்களாகவே கருதப்படும்.

9. கட்டுமானப் பணியின் காரணமாகத் தவிர்க்க இயலாது கடையின் இடையே தூண்கள் வருமாயின், அந்தக் கடையை ஏற்றுக் கொள்ள மனப்பூர்வமாகச் சம்மதிக்க வேண்டும்.

10. புத்தகக் காட்சிக்காக அறிவிக்கப்பட்ட நேரத்தை உரிமையாளர்களும் / பணியாளர்களும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும். காட்சி நேரம் முடிந்த 30 நிமிடங்களில் அரங்கப் பணியாளர்கள் புத்தகக் காட்சி அரங்கத்தை விட்டு வெளியேற வேண்டும். பாதுகாப்புக் கருதி அனைவரும் இந்த விதியைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

11. அடையாள அட்டை இல்லாமல் அரங்கப் பணியாளர்களோ / உரிமையாளர்களோ அரங்கத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

12. அரங்கத்திற்கான பொருள்களைக் கண்காட்சித் திடலுக்குள் கொண்டு வரும்போது அந்த வாகனங்களை பாதுகாப்புக் கருதிக் குறைந்த வேகத்துடன் (15 KMPH) இயக்க வேண்டும். வாகனங்களை அதற்குரிய இடங்களில் மட்டுமே நிறுத்திப் பொருள்களை இறக்க வேண்டும். நிறுத்த அனுமதிக்கப்படாத (No Parking) இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்கள் அறிவிப்பின்றி அகற்றப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். பங்கேற்பாளர்களின் வாகனங்களில் அதற்குரிய அடையாள அட்டை (Vehicle Pass) ஒட்டப்பட்டு இருந்தால் மட்டுமே அவற்றிற்கு கட்டணச் சலுகை அளிக்கப்படும்.

13. உறுப்பினர்கள் அரங்கங்களையும், பொது இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கண்டிப்பாகப் புத்தகக்காட்சி வளாகத்திற்குள் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கக் கூடாது.

14. அரங்கத்திற்கு வெளியே நடைபாதையில் விருந்தினர்களை அமர்த்தி வாசகர்களுக்கும், அருகில் உள்ள அரங்கங்களுக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தக் கூடாது.

15. அரங்கங்களுக்குத் தேவையான தளவாடங்களைப் பபாசியின் சான்று பெற்ற விநியோகஸ்தரிடமிருந்து பபாசி நிர்ணயித்த வாடகையில் உரிமையாளர்களே நேரிடையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதில் ஏற்படும் பிரச்சனைகளுக்குப் பபாசி பொறுப்பேற்காது.

16. பரிசுத் திட்டங்கள் மற்றும் சிறப்பு விலைத் திட்டங்கள் பபாசியின் அனுமதி பெற்றே நடத்தப்பட வேண்டும்.

17. வாசகர்களுக்கு எந்த ஒரு விதத்திலும் மன உளைச்சலை ஏற்படுத்தும் வியாபார யுக்திகளை எந்த ஒரு விற்பனையாளரும் மேற்கொள்ளக் கூடாது.

18. பபாசி நிர்வாகம் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகபட்ச கவனம் செலுத்திச் செய்து வருகிறது. இருப்பினும், இது வெற்றி பெற அரங்க உரிமையாளர்கள் / பணியாளர்களின் ஒத்துழைப்பும் மிக மிக அவசியம்.

19. பபாசியால் அமைக்கப்படும் அரங்கத்தின் பெயர் பதாகைகளை அகற்றவோ, மறைக்கவோ அனுமதி இல்லை.

20. ஒவ்வொரு அரங்கத்திற்கும் அளிக்கப்படும் இரண்டு அடையாள அட்டைகளுக்குமேல், அதிகமாகத் தேவைப்படின் ஒரு அட்டைக்கு ரூ. 60/- செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

21. அவ்வப்போது அலுவலக ஒலிபெருக்கியில் ஒலிபரப்பப்படும் அறிவிப்புகளைக் கேட்டறிந்து செயல்படுவது உரிமையாளர்கள்/பணியாளர்கள் கடமையாகும்.

22. தங்கள் அரங்கத்தில் உள்ள பொருட்கள் அனைத்தையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது அரங்க உரிமையாளர்கள் / பணியாளர்களின் பொறுப்பாகும்.

23. பபாசியால் செய்யப்படும் காப்புறுதிக்கு மேல் தேவைப்படுபவர்கள் தங்களின் சொந்தச் செலவில் செய்து கொள்ள வேண்டும்.

24. கடன் அட்டை (Credit Card) விற்பனைத் தொகைக்கான காசோலை, அரங்கம் எந்தப் பெயரில் எடுக்கப்பட்டதோ அந்தப் பெயரிலேயே வழங்கப்படும். தனிநபர் பெயரில் வழங்கப்பட மாட்டாது.

**மேற்குறிப்பிட்ட விதிமுறைகளை மீறிச் செயல்படும் நிறுவனங்கள் நடப்புக் காட்சியில் பங்கு கொள்வதற்கும், எதிர்காலத்தில் புத்தகக் காட்சியில் பங்கு கொள்வதற்கும் தடைவிதிக்கப்படும். மேற்கண்ட விதிமுறைகளுக்கு ஒப்புதல் அளிப்பவர்கள் மட்டும் அரங்க வாடகை செலுத்தி அரங்கத்திற்கான குலுக்கலில் பங்கு பெற வேண்டுகிறோம். எக்காரணத்தைக் கொண்டும் அரங்க வாடகையைத் திரும்பப் பெற இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**காட்சி நேரம்**

| 09.01.2020<br>தொடக்கம் - வியாழக்கிழமை<br>மாலை 6.00 மணி | **வார நாட்களில்**<br>மதியம் 3.00 மணி முதல்<br>இரவு 9.00 மணி வரை | **விடுமுறை நாட்களில்**<br>காலை 11.00 மணி முதல்<br>இரவு 9.00 மணி வரை |
|---|---|---|

சென்னை புத்தகக் காட்சி
CHENNAI BOOK FAIR
BAPASI
தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம்
THE BOOKSELLERS' & PUBLISHERS' ASSOCIATION OF SOUTH INDIA
8, Second Floor, Sun Plaza, G.N. Chetty Road, Chennai-600 006. Ph.:044-2815 5238, 4865 5238
Mail:bapasimail@gmail.com, Web:www.bapasi.in /bapasi /Bapasiofficial

# RULES AND REGULATIONS

*(This Rules and Regulation has to be duly sealed & signed and should be handed over along with the application form)*

1. All books and CDs banned by the Government pirated books, CDs are prohibited for display as well as sales.

2. Members are not allowed to sublet the stall allotted in their name or interchange stalls between language and English. If a member sublets or interchanges the allotted stall, this will be taken up seriously and their allotted stall will stand cancelled with immediate effect and the firm seizes to be member of BAPASI.

3. Stall holders should display their materials or advertise only in the space allotted to them and are allowed only a **3' x 2' cash table.** Stall Holders should not use more than two chairs (2 per Stall)

4. **A minimum discount of 10% has to be allowed for all the products sold irrespective of the price of the material. Giving more than 10% Discount is against BAPASI rules, but higher discount to Institutions and Trade is welcome. Bargain Prices are not allowed to sales.**

5. CDs should not be sold if the Stall is allotted under the books category. Use of Speakers are not allowed for stalls allotted under books category.

6. 3D Photos/Pictures and books without publishers name and address are prohibited for display and sales.

7. Multimedia Stalls should refrain from using speakers for giving demo of their products instead should only use **headphones** for the purpose.

8. Stall holders should issue bills only in the name of the allotted stall name. Materials sold without invoice/bill will be confiscated and treated as stolen materials.

9. BAPASI is taking utmost care to see that poles do not come inside a stall. In case some stalls have poles inside them, change of stall or refund of stall rent is not permissible.

10. The timing of the book fair has to be strictly adhered to by the owners / employees. Stall holders should vacate the stall within half an hour from the official closing time on all days and handover the place to security personnel.

11. Stall holders / employees will not be allowed to enter the exhibition grounds without the Identity cards.

12. Considering the security of others vehicles with book parcels entering the exhibition grounds should drive at very low speeds (15 Kmph). Vehicles should be parked only at the allotted spaces. Vehicles parked in the no parking area will be removed without information. Stall holders can park their vehicle free of cost only if accompanied by the vehicle pass.

13. Stall holders should keep their stalls as well as the common areas neat and clean. They should use the garbage bag provided to them to collect the waste materials. Issue of fliers within the exhibition area is prohibited.

14. Stall holders should not encroach the pathway by placing chairs for their readers/invitees thereby causing inconvenience to others.

15. The furniture required for displaying materials are to be taken only from the BAPASI authorised personnel/company directly by the stall holders. BAPASI will not be liable for any problems arising out of this.

16. Prize schemes if any by a stall holder should have BAPASI's advance concurrence.

17. Stall holders are prohibited from using any kind of marketing tools which may affect the general public.

18. BAPASI is taking utmost care in terms of security. BAPASI requests the stall holders / employees to cooperate with them in this regard.

19. The name board provided by BAPASI should not be removed, altered or defaced.

20. Each stall is given two Identity cards free. Additional identity cards can be purchased from the BAPASI office at Rs.60/- per card.

21. Stall holders are requested to make a note of the announcements made through the public address system from time to time.

22. Stall holders are requested to take care of their belongings, exhibit materials during the exhibition timings.

23. Based on which method accrues to the maximum tick marks that method of lot picking will be implemented.

24. Each stall insured for 2 Lacks for Fire & Blood is any are need more than two lacks they will make own cost.

25. Cheque payment for Credit Card sales will be issued in the name of Stall Holder Name (which is applied in the Application Form). We never issue Cheque in the Individual name.

***The stall holders who do not abide by the above rules will not be allowed to participate in the book fair and all future book fairs of BAPASI. Hence, we request that whoever accepts the above rules, duly seals and signs, pays the rent in full will only be allowed to participate in the draw of lots. The stall rent once paid will not be refunded at any cost.***

| 09.01.2020 - THURSDAY<br>**INAUGURATION**<br>at 6.00 p.m. | **EXHIBITION TIMINGS** | |
|---|---|---|
| | **WEEK DAYS :**<br>**3.00 p.m. to 9.00 p.m.** | **HOLIDAYS :**<br>**11.00 a.m. to 9.00 p.m.** |